# பொருளாதாரம்

## பகுதி - 3

## 3. வறுமை மற்றும் வேலையின்மை

1. உலகில் வளர்ந்துவரும் நாடுகள் சந்திக்கும் இருபெரும் பிரச்சனைகள், கொடிய வறுமையும்,பெருமளவு வேலையின்மையும், இவைகள் ஒன்றோடொன்று தொடர்புடையன.

2. வரையறை

1990 ம் ஆண்டில் உலக வங்கியானது "வறுமை என்பது குறைந்தபட்ச வாழ்க்கை தரத்தை அடைய முடியாத, திறனற்ற நிலையை குறிக்கிறது."

பேராசிரியர் டண்டேகர் என்பவரின் கூற்றுப்படி (1981) "எப்படியாயினும் வறுமை என்பது போதுமான வருமானத்தின் தேவையேயாகும்"

வாழ்க்கையின் மிகக் குறைந்தபட்ச அடிப்படை பொருள்களைக்கூட வாங்கக்கூடிய போதிய வருமானம் இல்லாத நிலை முக்கியக் காரணமாகும்.

3. வறுமையின் வகைகள்

1. முழு வறுமை

மக்களுக்கு போதிய உணவு, உடை, உறைவிடம் இல்லாத நிலையே முழுவறுமை நிலை என்கிறோம்

2. ஒப்பீட்டு வறுமை

மக்களின் பல்வேறு குழுக்களிடையே (உயர்தர, நடுத்தர, குறைவான வருமானம் பெறுபவர்கள்) காணப்படும் வேறுபாடுகளையோ(அ)ஒரே குழுவினரிடையே காணப்படும் வேறுபாடுகளையோ (அ) பல நாடுகளில் வாழும் மக்களிடையே காணப்படும் வேறுபாடுகளைக் குறிப்பதாகும். மக்கள் தொகையைப் பல்வேறு பிரிவினராக பிரித்துப் பார்க்கையில், அதாவது உயர்வருமானம் பெறும் 20% குறைவானவருமானம் பெறும் 20 சதவீதத்தினரோடு ஒப்பு நோக்குதலை "ஒப்பீட்டு வறுமை" என்கிறோம்.

3. தற்காலிக வறுமை (ம) முற்றிய வறுமை

4. முதல்நிலை வறுமை (ம) இரண்டாம் நிலை வறுமை

5. கிராமப்புற ஏழ்மை (ம) நகர்ப்புற ஏழ்மை

4. முதல்நிலை வறுமை (ம) இரண்டாம் நிலை வறுமைகளுக்கிடையே உள்ள வேற்றுமையை விளக்கியவர் யார்?

ரவுண்டிரி (1901)

5. முதல்நிலை வறுமை என்றால் என்ன?

குடும்பங்களில் வாழ்க்கை நடத்த மொத்த சம்பாத்தியங்களைக் கொண்டு குறைந்தபட்ச, அத்தியாவசிய, பொருள்களைக் கூட வாங்கமுடியாத, பற்றாக்குறையான நிலையைக் குறிக்கும்.

6. இரண்டாம் நிலை வறுமை என்றால் என்ன?

குடுப்பங்களின் சம்பாத்தியம், வாழ்க்கை நடத்தப் போதுமானதாக இருக்கும். ஆனால், அதன் ஒருபகுதியானது உபயோகமான (அ) உபயோகமற்ற செலவுகளுக்கு ஈர்க்கப்படும். குறிப்பாக மது அருந்துதல், சூதாட்டம் (ம) திறமையற்ற குடும்ப நிர்வாகம் போன்றவைகள் வீணான செலவுகளுள் சிலவாகும். ரவுண்டிரி அவர்களின் கருத்துப்படி முதல் நிலைவறுமையை இரண்டாம் நிலை வறுமையானது பல மக்களை தங்களது மனிதத் தேவையின் அளவினை அடைவதைத் தடை செய்கிறது. இந்த நிலை வறுமானம் பற்றாக்குறையாக உள்ளா முதல்நிலை வறுமையைக் காட்டிலும் மிகவும் மோசமான நிலை எனக் குறிப்பிடுகிறார்.

7. வறுமைக் கோடு என்றால் என்ன?

குறைந்தபட்ச வருமானம், நுகர்வு (அ) பொதுவாக, பண்டங்கள் (ம) பணியினை ஒரு தனிநபர் பெறும் வழியினைக் குறிக்கும்.

சத்துணவு அடிப்படையான வறுமைக்கோடு அநேக நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

8. இந்தியாவில் வறுமை.

தண்டேகர் (ம) இராத் அவர்களின் கணக்கீட்டின்படி நாம் அன்றாடம் குறைந்த அளவு 2250 கலோரி அளவு உணவு நுகர்தல் வேண்டும். திட்டக்குழு, நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 20 என்பதாக இதனை வரையறுத்துள்ளது. (அதாவது ஆண்டுக்கு ரூ. 240 ஆகும்.)

தண்டேகர் (ம) இராத் அவர்களின் பரிந்துரையின்படி 1960-61 விலைகளின்படி கிராமப்புற மக்களுக்கு குறைந்த அளவு ரூ.180 தனிநபர் ஆண்டு வருமானமும் நகர்ப்புற மக்களுக்கு குறைந்த அளவு தனிநபர் வருமானம் ரூ.270 எனப் பரிந்துரை செய்துள்ளார்.

ஏழாவது நிதிக்குழு நீட்டிக்கப்பட்ட ஏழ்மைக்கோடு என்னும் புதிய கருத்தை பயன்படுத்தியது. இதில் தனியார் நுகர்வு செலவுடன் 1. உடல் நலன் (ம) குடும்ப நலன் 2. குடிநீர் (ம) சுகாதாரம் 3. கல்வி 4. காவல்த்துறை, சிறைத்துறை, நீதித்துறை ஆகியவற்றை நிர்வகித்தல் 5. சாலைப் போக்குவரத்து மற்றும் 6. சமூகநலம் ஆகியவற்றின் மீதான தனிநபர் பொதுச் செலவும் கணக்கில் எடுத்துகொள்ளப்பட்டது.

ஏழாவது நிதிக்குழுவின் மதிப்பீட்டின்படி 52% மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளனர். மேலும் இது கிராமப்புற (ம) நகர்ப்புற மக்களுக்கும் பொதுமக்களுக்கும் பொதுவாகப் பொருந்துவதாகும்.

9. இந்தியாவில் வறுமைக்கான காரணங்கள் யாவை?

1. வேலையின்மையும் வேலைக்குறைவும்
2. மக்கள்தொகை அழுத்தம்

10. வறுமை ஒழிப்புத் திட்டங்கள்

1. நிலச்சீர்திருத்தம்

மாநில அரசுகள் நிலச்சீர்திருத்த சட்டங்களை இயற்றுவதன் மூலமாக நிலமற்ற விவசாயிகளின் பொருளாதார நிலைமைகளை மேம்படச் செய்ய வழிவகுத்தன. ஜமீன்தார் முறை ஒழிக்கப்பட்டதினால், சுரண்டல் முறைகள் சமுதாயத்தை விட்டு நீக்கப்பட்டன. பல மாநிலங்களில் குத்தகைச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

2. ஜவகர் கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

1999 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது.இத்திட்டத்திற்காகும் செலவினை மத்திய (ம) மாநிலங்களைக்கிடையே 75:25 என்ற முறையில் பிரித்துக் கொள்ளப்பட்டது.

3. நாட்டு சமூக உதவித்திட்டம்

ஆகஸ்டு 15ம் நாள் 1995 ம் ஆண்டு துவங்கப்பட்டது. 100% இத்திட்டத்தை மைய அரசே ஏற்று நடத்தும். இத்திட்டத்தின் மூலமாக ஏழைக் குடும்பத்தினர், வயது முதிர்ந்தோர், வருமானம் ஈட்டும் குடும்பத் தலைவனை இழந்த குடும்பத்தினர் (ம) மகப்பேரு கால உதவி பெறுவோர், அதிக நலன்கள் பெறுவ்ர்.

4. வேலைவாய்ப்பு உறுதித்திட்டம்

1993, அக்டோபர் 2 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. நாட்டிலுள்ள வளர்ச்சியால் பாதிக்கப்பட்ட பழங்குடியினர் வாழக்கூடிய பாலைவனங்கள், பழங்குடியிருப்புகள் (ம) மலைப்பகுதிகளாகிய 1778 பிற்பட்ட தொகுப்புகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.. இத்திட்டமானது விரிவாக்கப்பட்டு 5488 கிராமப்புற தொகுப்புகள் பயனடைந்தனர். வேலையில்லா கிராமப்புற மக்களுக்கு கூலி வேலையை ஏற்படுத்தித் தந்தது. புதிய சம்பூரண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்துடன், வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (ம) ஜவகர் கிராம வேலைவாய்ப்புத் திட்டமும் செப்டம்பர் 2001 ல் இணைக்கப்பட்டது.

5. பிரதமரின் வேலைவாய்ப்புத்திட்டம்

2000-2001 நிதிநிலை அறிக்கையின்போது அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் சுகாதாரம், அடிப்படைக் கல்வி, குடிநீர், வீட்டு வசதி (ம) கிராமப்புறங்களில் சாலை அமைத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது.

6. பொன்விழா ஆண்டு ஊரக தன் வேலைவாய்ப்புத் திட்டம்

நகர்ப்புற சுயவேலைவாய்ப்பையும் (ம) நகர்ப்புற கூலி வேலை ஆகிய இவ்விரண்டும் சிறப்புத் திட்டங்களாகும். 1997 ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நகர்ப்புற வறுமை ஒழிப்பு திட்டத்தின்கீழ் செயல்பட்டு வந்த முந்தைய திட்டங்களை இத்திட்டமானது மாற்றி அமைத்தது. மத்திய மாநில அரசுகளும் 75:25 என்ற விகிதத்தில் திட்டத்திற்குத் தேவையான செலவை மேற்கொள்கின்றனர். இத்திட்டத்திற்கான செலவு ரூ.45.5 கோடி ஆகும். 2001-2002 ல் ரூ.39.21 கோடி (ம) 2002-2003 ல் ஒதுக்கீடானது ரூ.105 கோடியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது

7. கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம்

1976-77 ம் ஆண்டில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் இத்திட்டம் முதன் முதலாக முன்மொழியப்பட்டது. கிராம மக்களுக்கு உதவி செய்யவும், பொருளாதார வளர்ச்சி நலன்களை, கிராமப்புற பகுதிகள் பெற்று பயனடைவதையே நோக்கமாகக் கொண்டது. 1978-79 ல் மற்றியமைக்கப்பட்டு அதன் அளவு விவரிக்கப்பட்டது. துவக்கத்தில் 2300 தொகுப்புகளில் அதில் 2000 தொகுப்புகளில் SFDA, DPAP, மற்றும் CADP இத்திட்டத்தில் செயல்பட்டன.

11. பாரத் நிர்மான் திட்டம் எப்போது அறிமுகப்படுத்தப்பட்டது?

டிசம்பர் 2005 ல் அறிமுகப்படுத்தப்பட்டது. 104000 கோடிகள் நிதியுதவி அளிக்கப்பட்டது.

12. வேலையின்மை என்பது, தொழிலாளர்கள் வேலை செய்யும் தகுதியும் விருப்பமும் இருந்தும், வேலை கிடைக்காமல் இருப்பது ஆகும்.

13. வேலையின்மை அளவீடுகள்

ஒரு நபர் ஒரு நாளைக்கு 8 மணி நேரங்கள் போன்று ஒரு வருடத்திற்கு 73 நாட்களுக்கு நியமனம் செய்யப்படுவதையே குறிப்பது ஆகும். NAA ல் 27 வது கூற்றுப்படி, வேலையின்மை அளவீடுகளை 3 வகைகளாகப் பிரிக்கலாம்.

1. பொதுவான முதன்மை நிலை வேலையின்மை
2. வாராந்திர நிலை வேலையின்மை
3. தினமும் வேலையின்மை

14. வேலையின்மையின் வகைகள் யாவை?

1. படிநிலை வேலையின்மை
2. குறைவேலையின்மை
3. திறந்த வேலையின்மை
4 மறைமுக வேலையின்மை
5. உராய்வு வேலையின்மை
6. பருவகால வேலையின்மை

15. வேலையின்மைக்கான காரணங்கள் என்ன?

1. அதிக மக்கள்தொகை வளர்ச்சி
2. போதுமான்ச் பொருளாதார வளர்ச்சி வீதம் இன்மை
3. வேளாண்மை தவிர பிறதுறைகளில் வேலைவாய்ப்பு குறைவு
4. பருவகால வேலைவாய்ப்பு
5. கூட்டுக் குடும்ப அமைப்பு
6. இந்தியப் பல்கலைக்கழகத்திலிருந்து பெருகிவரும் மாணவர்கள்
7. குறைவான தொழில் வளர்ச்சி

16. இந்தியாவில் வேலையின்மை பிரச்சினைக்கான தீர்வு

1. முதலீட்டு முறைகளில் மாற்றம் செய்தல்

2. பெரிய நிறுவனங்களுக்கு எதிராக சிறிய நிறுவனங்களை ஊக்குவித்தல்

3. தொழில்நுட்ப முறைகளில் காணப்படும் பிரச்சனைகளை தேர்ந்தெடுத்தல்

4. சிறுநகரங்கள் (ம) கிராமப்புறங்களில் புதிய வளர்ச்சி மையங்களை ஊக்குவித்தல்

5. வேலை வாய்ப்புகளின் அடிப்படையில் சலுகைகள்

6. கல்விக் கொள்கையில் புத்தாக்கம்

7. கிராமப்புறங்களின் குறை வேலையுடைமை